**வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி -2021/2022 (கொடுக்கல்வாங்கல் அறிக்கை)**

வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனியின் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். பிரிவு 16(2) இன் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்குமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், பிரதான கணக்கீட்டு அலுவலரால் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளினால் வழங்கப்படுகின்ற காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உபபிரிவு 38(1)(ஈ) இன் பிரகாரம் வருடாந்த மற்றும் நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதி செய்வதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு நிறுவனம் தொடர்பாக வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர் வேண்டப்படுகின்றார்.

**2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணங்களின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகைத் திகதியின் 06 மாதத்திற்குள் நிதிக்கூற்றுக்கள் அவற்றின் தயாரிப்பிற்கு பொறுப்பான நபரினால் சான்றுறுதிப்படுத்தப்படுவதை கம்பனியின் பணிப்பாளர் சபை உறுதி செய்ய வேண்டும்.

**2.1 நிதிக்கூற்றுக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் அரச கம்பனிகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், | 2018/2019,2019/2020 ஆம் வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2020/2021 ஆம் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுவதற்கு | சுற்றிக்கைப் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கம்பனியால் 2018/2019, 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் நிதியாண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 16 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பக்கள் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 (2) (எ) பிரிவு | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற மற்றும் அதன் பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட சதவீதத்தை அரசு அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் வைத்திருந்தால் அக் கம்பனிகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட பின்னர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் | | | |
| (i) 5.2.3 மற்றும் 4 ஆம் பந்திகள் | கம்பனியால் வருடாந்த வரவு செலவுத் திட்ட | 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 6.5 ஆம் பந்தி | கம்பனியினால் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 8.3.4 மற்றும் 8.3.5 ஆம் பந்திகள் | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைக்கு மாறாக கணனி பாடசாலையின் நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு 2021 மே முதல் ஒக்டோபர் வரை தொலைபேசி கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளாக மொத்தம் ரூபா 60,821 சுற்றறிக்கைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. | கோவிட் காலத்தில் கணனி பாடசாலையின் அலுவல்கள் இடம்பெற்றதுடன், அவர்கள் காலியிலிருந்து பயணம் செய்ததால், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒருங்கிணைந்த திட்டமொன்று மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022 முதல் 2026 வரையான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.அது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 3.4.3 (அ),(ஆ), (இ) மற்றும் (ஈ) பந்திகள் | கம்பனியால் 2020/2021 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது இதற்கு மாறாக உணவக பெறுகைகளுக்காக ரூபா 3 | அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கைகளை கம்பனி பின்பற்றுவது கடினம் என்பதையும், அவசரத் தேவையின் அடிப்படையில் கம்பனிக்கு கட்டளைகள் பெறப்படுகின்றமையால் | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | உணவகம் தொடர்பான பெறுகைகளை செய்வதில் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு அந் நிறுவனம் உடன்படவில்லை என்பதால் அதை பணத்திற்கு வாங்க வேண்டியேற்பட்டது என்பதை தெரிவிக்கின்றேன். | |
| (ii) | 4.2.1 (அ) பந்தி | கம்பனியால் பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | ஏதிர்காலத்தில் கம்பனிக்கு உரிய பெறுகைத் திட்டத்தை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கான சேவைகளை வழங்குவதன் மூலம் ரூபா 10.2 மில்லியன் வருமானம் கிடைத்த போதிலும் இது எதிர்பார்த்த வருவாயில் 5.4 சதவீதமாகும். மேலும், கம்பனியின் அச்சகத்தில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 17 மில்லியனாக இருந்த ஆண்டு வருமானம் 2021 ஆம் ஆண்டுக்குள் ரூபா 5.6 மில்லியனாக குறைந்துள்ளது. இது 66 சதவீதமாக் குறைந்துள்ள நிலையில், கம்பனியின் அச்சகத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் தொற்று நிலைமை காரணமாக அச்சகத்தை அவ்வப்போது மூட வேண்டியேற்பட்டதால் பணிகளைச் சரியாகச் செய்ய முடியாதிருந்ததடன் தற்போதுள்ள அச்சியந்திரத்தின் மூலம் இலக்கு வருமானத்தை அடைவது கடினமாக உள்ளமையால் புதிய அச்சியந்திரததை வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அச்சகத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வருமானத்தை மேம்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படல் வேண்டும்.. |
| (ஆ) | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சம்பள நிலுவையை 2020 ஆம் வருடத்தில் பெப்ரவரி முதல் திசெம்பர் வரை வழங்குவதற்காக 2021 யூலையில் தேசிய இளைஞர் சேவை மன்றம் 6 மில்லியன் ரூபாவை | கம்பனியின் நிதி நிலைமையின் அடிப்படையில், அந்த தொகையில் உணவக பற்றுச்சீட்டுக்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் வாங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் மேலும் எதிர்காலத்தில் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று | சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நிலுவைத் தொகையை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்த போதிலும், அந்தத் தொகை அதிகாரிகளின் சம்பள நிலுவைகளுக்காக பயன்படுத்தப்படாது கம்பனியின் உணவகத்தின் நுகர்வோர் பொருட்களை வாங்குவதறகு மற்றும் கம்பனியின் நிர்வாக செலவுகளை ஈடுசெய்வதற்கும் பயன்படுத்தப் பட்டது. | அறிவுறுத்தப்பட்டது. | |
| (இ) | வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை தனியார் கம்பனியின் கீழ் 2021 செப்டெம்பர் 21 ஆம் திகதி கணனிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி அந்தப் பாடசாலைக்கு 10 உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2021 மே முதல் ஒக்டோபர் 31 வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2 மில்லியனுடன் கணனி பாடசாலைக்கு ரூபா 4.1 மில்லியன் மொத்தமாக செலவழித்திருந்த போதிலும் , கணனி பாடசாலை இற்றை வரையில் செயற்பாட்டு நிலையில் இருக்கவில்லை. | எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை. கணனி பாடசாலை தொடங்கப்பட்டு அதற்கு ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன்,அவர்களை ஈடுபடுத்தி கணனி பாடசாலையில் தொடர்புடைய பாடத்திட்டங்களை உருவாக்கவும் அதன் மூலம் வருமானம் ஈட்டவும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன், பின்னர் இந்தத் திட்டத்தின் சில அதிகாரிகள் தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு நியமிக்கப்பட்டனர். அதன்பின் அந்த கம்பனியின் கணனி பாடசாலையை பராமரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை:. | புதிய திட்டங்களைத் தொடங்கும்போது, விரும்பிய நோக்கங்களை அடையும் வகையில் திட்டமிட்ட முறையில் செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் அச்சகத்தில் 2021 திசெம்பர் 31 இல் தேசிய இளைஞர் சேவை மன்றம் மற்றும் வெளி நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய மொத்தம் ரூபா 16.4 மில்லியன் கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த கடன் மீதியில் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 14.1 மில்லியன் இருந்தது. அந்த கடன் மீதியை வசூலிப்பதில் நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை.. | இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு ஏற்கனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கடன் மீதிகளை விரைவில் வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2021 ஏப்ரல் 01 ஆம் திகதி, நிறுவனத்துக்குச் சொந்தமில்லாத இளைஞர் சேவை மன்றத்தின் மாத்தளை இளைஞர் நிலையக் காணியின் ஒரு பகுதிக்கான வேலி அமைப்பதற்காக மற்றும் கம்பனியின் | இந்தத் தொகை அப்போதைய தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் முகாமைத்துவ பணிப்பாளரால் பெறப்பட்டிருந்ததுடன் இதுவரை தீர்வு செய்யப்படவில்லை. குறித்த தொகையை மீளப் பெறுவதற்கு | குறித்த தொகையை விரைவில் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான கண்காணிப்புச் சுற்றுப்பயணத்திற்காக முகாமைத்துவப் பணிப்பாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 100,000 ஆன கொடுப்பனவுகளுக்கான ஆதார ஆவணங்கள் மற்றும் செலவினம் தொடர்பான அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஊ) | நிறைவேற்று அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளுக்கு மட்டுமே குறிப்பிட்ட பணிக்காக ஒரு நேரத்தில் அதிகபட்சமாக ரூபா 100,000 வரை செயல் நிமித்த இடைக்கால கட்டுநிதி வழங்க முடியும் என்பதுடன் வேலை முடிந்தவுடன் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு மாறாக கம்பனியால் 08 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 100,000 ஐ விஞ்சியதாக ரூபா 1.6 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மேலும், முற்பணம் தீர்க்கப்பட்டபோது 19 சந்தர்ப்பங்களில் மொத்த பெறுமதி ரூபா 2 மில்லியன் ஆன முற்பணங்கள் 03 மாதங்கள் மற்றும் 22 நாட்களுக்குள் தாமதமாக செலுத்தப்படடிருந்தன. | உரிய முற்பணத்தை பெற்று, நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் ஏனைய அலுவலர்களுக்கு உணவு வழங்குவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததுடன், உணவகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் பணிக்கு சமூகமளிக்கவில்லை. | இடைக்கால முன்பணங்கள் உரிய வரம்புகளுக்கு உட்பட்டு வழங்கப்பட வேண்டும் மற்றும் பணிகள் முடிந்தவுடன் முற்பணங்களை தீர்வு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |